## வகுப்பு - 7 - பருவம் - 1 - வரலாறு

## 4. டெல்லி சுல்தானியம்

71. தவறான கூற்றைக் கண்டறியவும்.

(1) சுல்தான் கைகுபாத் என்ற பெயரில் நாட்டை ஆண்டவர் ஜலாலுதீன் கில்ஜி ஆவார்.

(2) முகமது பின் துக்ளக் மிகவும் கற்றறிந்த மனிதர். ஆனாலும் அவர் குரூரம் நிறைந்தவர்.

(3) பிரோஷ் ஷா துக்ளக் 1200 புதிய தோட்டங்களை உருவாக்கியுள்ளார்.

(4) கி.பி.1489இல் பகலூல் லோடியைத் தொடர்ந்து அவரது மகன் இப்ராகிம் லோடி அரசப் பதவியேற்றார்.

72. பொருத்துக.

| | | |
|---|---|---|
| a. துக்ரில்கான் | - | i. காராவின் ஆளுநர் |
| b. அலாவுதீன் | - | ii. ஜலாலுதீன் யாகுத் |
| c. பகலூல் லோடி | - | iii. வங்காள ஆளுநர் |
| d. ரஸ்ஸியா | - | iv. சிர்கந்தின் ஆளுநர் |

(1) 1 - ii 2 - i 3 - iv 4 - iii (2) 1 - iii 2 - i 3 - iv 4 - ii

(3) 1 - iv 2 - i 3 - ii 4 - iii (4) 1 - iii 2 - iv 3 - i 4 - ii

73. பிரோஷ் ஷா துக்ளக் தனது ஆட்சிக்காலத்தில் _______ புதிய தோட்டங்களை உருவாக்கினார்.

(1) 30 (2) 1000 (3) 1200 (4) 1500

74. இல்துமிஷை சுல்தானாகத் தேர்வு செய்தவர் _______.

(1) மக்கள் (2) ஆளுநர்கள்

(3) இல்துமிஷின் தந்தை (4) துருக்கிய பிரபுக்கள்

LIVEWORKSHEETS

75. கூற்று 1: குவாரிஜம்-ஷா-ஜலாலுதீன் -க்கு அடைக்கலம் தர மறுத்தார் இல்துமிஷ்

காரணம்: மங்கோலியரின் ஆபத்தைத் தவிர்க்க

(1) கூற்று மற்றும் காரணம் சரி (2)கூற்று சரி, காரணம் தவறு.

(3) கூற்று மற்றும் காரணம் தவறு (4) கூற்று தவறு, காரணம் சரி

76. இக்தாதாரின் மற்றொரு பெயர் ________

(1) வீரர் (2) தளபதி (3)முக்தி (4) தோஆப்

77. ஜலாலுதீன் யாகுத் ஓர் ______ அடிமை.

(1) எத்தியோப்பிய (2) துருக்கிய (3) மனவலிமை (4) இந்திய

78. துருக்கிய பிரபுக்கள் ரஸ்ஸியாவை வெறுக்க காரணம் __________

(1) பெண்ணரசி என்பதால்

(2) துருக்கியர் அல்லாத பிரபுக்களுக்கு ஆதரவாக இருந்ததால்

(3) மனவலிமை அற்றவர் என்பதால்

(4) நிர்வாகத்திறமை இன்மையால்

79. ஒற்றர் துறையை நிறுவியவர் _________

(1) பால்பன் (2) ரஸ்ஸியா (3) இல்துமிஷ் (4) ஜூனாகான்

80. செங்கிஸ்கான் பேரன் ______

(1) தைமூர் (2) துக்ரில்கான் (3) குலகுகான் (4) சையது

81. அலாவுதீன் கில்ஜியின் தலைமைத் தளபதி ________

(1) சலீம் (2) ஜலாலுதீன் யாகுத் (3) கியாசுதீன் (4) மாலிக்கபூர்

82. போரில் தோற்கும் நிலையில் பெண்கள் தீக்குள் புகுந்து உயிரை மாய்த்துக்கொள்ளும் முறை ______.

(1) சதி (2) ஜவ்ஹர் (3) தலாக் (4) நாயிப்

LIVEWORKSHEETS

83. கட்டாய உணவு தானியக் கொள்முதல் முறையை அறிமுகம் செய்தவர் ____

(1) அலாவுதீன் கில்ஜி (2) ஜலாலுதீன் கில்ஜி

(3) முகமது பின் துக்ளக் (4) பால்பன்

84. கூற்று 1: ஜூனாக்கான் வாராங்கலை வென்று பெரும் செல்வத்தை கொள்ளையடித்தார்.

கூற்று 2: இச்செல்வத்தினைக் கொண்டு துக்ளகாபாத் நகரை நிர்மாணம் செய்தார் ஜூனாகான்.

(1) கூற்று 1 மற்றும் 2 தவறு (2) கூற்று 1 மற்றும் 2 சரி

(3) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு (4) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

85. _______ ஆம் ஆண்டில் வங்காளம் சுதந்திர அரசானது.

(1) 1303 (2) 1335 (3) 1346 (4) 1351

86. நிலவரியை பணமாக வசூலித்தவர் ___________

(1) முகமது பின் துக்ளக் (2) கியாசுதீன் துக்ளக்

(3) பெரோஷா துக்ளக் (4) இல்துமிஸ்

87. பிரோஷ் ஷா நிர்மாணிக்காத நகரம் ___________

(1) பிரோசாபாத் (2) ஜான்பூர் (3) சித்தூர் (4) ஹிசார்

88. சாமர்கண்ட் பகுதியை ஆட்சி செய்தவர் _____________

(1) தைமூர் (2) செங்கிஸ்கான் (3) துக்ரில்கான் (4) சாமரின்

89. தைமூரின் படையெடுப்பால் டெல்லிக்கு அடுத்து பாதிப்படைந்த பகுதி _______

(1) பஞ்சாப் (2) சிந்து (3) சித்தூர் (4) ராஜஸ்தான்

90. குத்புதீன் தனது தலைநகரை _________ லிருந்து டெல்லிக்கு மாற்றினார்.

(1) புனே (2) லாகூர் (3) தௌலதாபாத் (4) ஆக்ரா

91. காலத்தின் அடிப்படையில் ஆட்சிபுரிந்தவர்களின் சரியான வரிசை முறை ____

LIVEWORKSHEETS

(1) ரசியா (2) பால்பன் (3) இல்துமிஷ் (4) ஐபெக்

(1) 4, 3, 2, 1 (2) 4, 3, 1, 2 (3) 4, 1, 2, 3 (4) 4, 1, 3, 2

92. இந்தோ சாராசனிக் கலை வடிவத்தின் கட்டட வடிவம் ______ பாணியில் இருக்கும்.

(1) பாரசீக (2) இந்திய (3) துருக்கிய (4) அரேபிய

93. கூற்று 1: மியோக்கள் மீவாட்டை சேர்ந்தவர்கள்.

கூற்று 2: மியோக்கள் வடமேற்கு இந்திய ராஜபுத்திர முஸ்லீம் இனத்தவர்.

(1) கூற்று 1 மற்றும் 2 சரி (2) கூற்று 1 மற்றும் 2 தவறு

(3) கூற்று 1 சரி, 2 தவறு (4) கூற்று 1 தவறு, 2 சரி

94. பொருந்தாததைத் தேர்வு செய்க.

(1) ஐபெக் (2) இல்துமிஷ் (3) கியாசுதீன் துக்ளக் (4) கியாசுதீன் பால்பன்

95. பொருந்தாததைத் தேர்வு செய்க.

(1) குதுப்மினார் (2) அலெய் தர்வாசா (3) ஜும்மா மசூதி (4) மோத்தி மசூதி

96. பொருத்துக

(i) அடிமை வம்சம் - a. பிரோஷ் ஷா

(ii) கில்ஜி வம்சம் - b. இப்ராஹிம்

(iii) துக்ளக் வம்சம் - c. அலாவுதீன்

(iv) லோடி வம்சம் - d. பால்பன்

(1) i – d ii – c iii – a iv – b (2) i – a ii – c iii – d iv - b

(3) i – d ii – c iii – b iv - a (4) i – c ii – d iii – a iv - b

97. கீழ்வருவனவற்றுள் சரியான கூற்று/ கூற்றுகளைத் தேர்ந்தெடுக்கவும்

(NMMS-2020-21)

LIVEWORKSHEETS

i. இல்துமிஷ் தனது படைகளில் பணியாற்றியோர்க்கு இக்தாக்களை (நிலங்கள்) வழங்கினார்.

ii. 'இக்தா' என்பது இராணுவ அதிகாரிகளுக்கு வழங்கப்பட வேண்டிய உயர்பதவிக்காக கொடுக்கப்பட்ட நிலமாகும்

iii. நிலத்தைப் பெற்றவர் இக்தாதார் அல்லது முக்தி என்றழைக்கப்பட்டார்.

iv. இக்தாதார் தனக்கு வழங்கப்பட்ட நிலங்களிலிருந்து வரிவசூல் செய்து கொள்வார்.

(1) i மற்றும் ii மட்டும்	(2) iii மற்றும் iv மட்டும்

(3) ii மட்டும்	(4) i, iii மற்றும் iv மட்டும்

98. தவறான இணையைக் கண்டறியவும் (NMMS-2020-21)

(1) குத்புதீன் ஐபக் - குவ்வத்-உல்-இஸ்லாம்-மஸ்ஜித்

(2) இல்துமிஷ் - குதுப்மினாருக்கு அடிக்கல் நாட்டியவர்

(3) ஔரங்கசீப் - ஆலம்கீர்

(4) முகமது கோரி மற்றும் பிருதிவிராஜ் சௌகான் - தரைன் போர்

99. _______ என்பவரின் மகள் ரசியா சுல்தானா (NMMS 2019-20)

(1) இல்துமிஷ்	(2) முகமது கோரி

(3) முகமது கஜினி	(4) குத்புதீன் ஐபெக்

100. துக்ளக் ஆட்சியில் வேலைவாய்ப்பு அமைப்பை ஏற்படுத்தியவர் ___ (NMMS-2018)

(1) முகமது பின் துக்ளக்	(2) பிரோஷ் துக்ளக்

(3) கியாசுதீன் துக்ளக்	(4) நாசிர்-உத்-தீன் முகமது துக்ளக்

LIVEWORKSHEETS